HYO

**இந்து இளைஞர் இயக்கத்தின் சரித்திர ஏடுகள் புரட்டப்படும்போது**

1949களிலேயே இந்து இளைஞர் இயக்கம் என்ற இந்த ஆல விருட்சத்தின் விதை தூவப்பட்டுவிட்டது. 12 பள்ளி மாணவர்களன் கூட்டு முயற்சி அது. காற்சட்டை வயதில் அவர்கள் வீட்டு இளைஞர்களைப் போல் அடிபடாமல், என்னால் என் சமயத்திற்கு என்ன செய்ய முடியும் என இந்த இளைஞர்கள் யோசித்த பொன்னான நேரம் அது.

1949 ஒரு ஓய்வான ஞாயிறு மாலை அது. கோலாலம்பூர், ஈப்போ ரோடு செட்டியார் மண்டபத்தின் திண்ணையில் அமர்ந்திருந்த இளைஞர்கள் திரு. சற்குணமும், திரு. சண்முகநாதனும் பேசிக் கொண்டிருந்தபோது உதித்த அந்த சிந்தனைதான் மேலும் செல்வராஜா திரு. செல்வநாயகம், திரு. பாலசுந்தரம், திரு. சண்முகநாதன், திரு. நவரத்தினம், திரு. பஞ்சாசரம் ஆகியோரும் ஒன்று சேர்ந்து செயலாற்றுவதற்கு பாலமாய் அமைந்தது.

இவர்கள் அனைவரையும் துருவ நட்சத்திரமாய் இருந்து வழிகாட்டி அழைத்துச் செல்ல முன் வந்தவர் இப்போதைய தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் தலைவர், சுவாமிஜி சத்யானந்தா Phd, JP அவரது ஆலோசனையின் பேரில் ஆன்மீக மன்றம் அமைக்கப்பட்டது. இவர்களது முதல் சமூகச் சேவை பத்து மலையில் தண்ணீர் பந்தல் போட்டதுதான். அதன்பிறகு நடந்த இரண்டாவது கூட்டத்தில் இயக்கத்திற்கான சட்டங்கள் தீர்மானிக்கப்பட்டன. அதன் பிறகு இந்த இளைஞர்கள் ஆற்றிய சமூக, சமய கல்வி தொண்டு பலரை ஆச்சரியப்பட வைத்தது. இளையோரால் இவ்வளவு சாதிக்க முடியுமா என யோசிக்க வைத்தது. 1949ல் இந்து இளைஞர் இயக்கமாக பெயர் மாற்றம் கண்டது YSG இயக்கம். அதன் முதலாவது ஆண்டுக் கூட்டத்தை 17.08.1952ல் மாலை மணி 3.30க்கு செந்தூல் தம்புசாமி தமிழ்ப்பள்ளியில் நடத்தியது. திரு. ராமநாதன் அவர்களால் இந்நிகழ்வு தொடக்கி வைக்கப்பட்டது.

மலாயா சைவ சித்தாந்த மன்றத்தோடு இணைந்து அதன் இளைஞர் பகுதியாக இருந்து செயலாற்றியது. மேலும் கோலாலம்பூர் இந்து இளைஞர் இயக்கம் என்ற பெயரோடும் அது விளங்கியது. இந்த இயக்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

அதன் திறப்புரை ஆற்றியவர் Gerald Hawkind (OBE). அவரது உரையில் இந்த இந்து இளைஞர்

இயக்க சேவைகளை பாராட்டிய அவர் அந்த இயக்கம் சிலாங்கூர் மாநில இளைஞர் பேரவையுடன் இணையும் எனவும் அறிவித்தார். மேலும் இந்த கூட்டத்திற்கு சிறப்பு சேர்க்க George Carter (Secretary of the world Assembly of youth) A.R. Allen Youth Service Advicer, Federation of Malaya) Mr. Fred Arulanandam ( President of Malayan Youth Council), Eric Wee, (President of the Singapore Youth Council) ஆகியோர் கலந்து கொண்டனர்.

08.08.1954ல் விவேகானந்தா ஆசிரமத்தில் நடந்தேறிய 3வது ஆண்டு விழாவின் சிறப்பு விருந்தினராக உயர்திரு. முஸ்தாபா அல்பக்ரி Phd, (Member of Social and Indsutrial Relations, Federation of Malaya) கலந்து சிறப்பித்தார். அவரது உரையில் இளைஞர்கள் சீரிய வளர்ச்சிக்கு இந்து இளைஞர் இயக்கம் ஆற்றிய சேவைகளை மனமார புகழ்ந்தார். அதே நிகழ்வில் உரையாற்றிய ஆலோசகர், T. சிவப்பிரகாசம் (MBE) அவர்கள் “மூன்று வருடங்களுக்கு முன்பு 12 இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சியின் வெற்றி இது. நீங்கள் உங்கள் சுய காலில் நின்று வளர வேண்டிய தருணம் வந்துவிட்டது” எனவும் குறிப்பிட்டார்.

4வது பொதுக்கூட்டம் 20.08.1955ல் விவேகானந்தா ஆசிரமத்தில் நடைபெற்றபோது கேப்டன் முகமட் சாலே பின் ஹாஜி சுலைமான் (MBE) Deputy Chief Minister Social Welfare Officer) சிறப்புரையாற்ற வந்திருந்தார். சமூகம் உங்களுக்கு வழங்கியுள்ள கடமைகளை சிறிதும் குறைவில்லாமல் செய்திருக்கிறீர்கள். சமயச் சிந்தனை முன் வைத்து செயல்படும் உங்களை பார்க்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது என்றார்.

இப்படியாக தொடங்கிய இந்த இயக்கம் தனது சிறகை விரித்து நமது தாய்த்திருநாடு முழுவதும் கிளை பரப்பியுள்ளது. ஆல் போல் பரவு வேல் போல் உறுதியோடு இன்னும் இயங்கி வருகின்றது நமது பேரவை. இளைஞர்களை வழி நடத்திச் செல்ல வேண்டிய இந்த அரும்பணியில் உங்களது பங்கும் இருப்பதை நினைத்து மகிழ்வு எய்துகிறோம்.